

# சரஸ்வதி

# நினைவு மலர்

24-02-1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி. சரஸ்வதி விஜயரெத்தினம்

(பேபி அம்மா)

## அவர்கள்



தோற்றம்:
**19-01-1921**

மறைவு:
**25-01-1997**

## திதி வெண்பா

ஆண்டு தாது தையில் ஆன அமரபக்கப்
பூண்ட துதியைப் பொற்திதியில் – வேண்டும்
வீரகத்தி விநாயகனார் அன்புமலர்ப்பாதம்
சரஸ்வதியார் சென்றடைந்தார் முன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



யாழ்ப்பாணம் - நீராவியடி

உயர் சைவ வேளாண் குலத் திலகர்

திருவாளர்

## கார்த்திகேசு விஜயரெத்தினம்

அவர்களின் மனைவி

## திருமதி. சரஸ்வதி

அவர்கள்

## இறைவன் திருவடிப் பேறு எய்தியமை
## குறித்து வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

24-02-1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்துவரும்

## தேவாரம்

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
யாரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைப்பேன்
ஆண்டநீர் அருளிலையானால்
வார்கடல் உலகினில் வாழ்கிலேன் கண்டாய்
வருக வருக வென்று அருள் புரிவாயே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ்சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிர வென் கண்கள்குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
ஆட்செய்மின் குழாம் புகுந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்டங் கடந்த பொருளளவு இல்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

அருவமு முருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகக்
கருணை கூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே
ஒரு திருமுருகன் வந்தான் உதித்தனன் உலகமுய்ய.

## திருப்புகழ்

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகி
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமானே.

## திருமந்திரம்

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டு
சூரையங் கட்டிடைக் கொண்டுபோய்ச் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப்பொழிந் தார்களே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள் வாழ்த்து

நல்லை நகரில் உறைகின்ற
நாதா ஆறுமுக சுவாமி
எல்லை யில்லாய் பேரருளே
ஈசன் மைந்தா என்னைக்காப்பாய்
தொல்லை நீக்கிச் சுகந்தருவாய்
சுற்றம் காப்பாய் சுடர் விளக்கே
அல்லல் போக்கி சரஸ்வதியாம்
அடியாள் உன்னை அணைந்திட வை.

பாரம் நீக்கிப் பாரினிலே
பசுமை யாக வாழ்ந்திடவே
ஆரம் புனைந்த ஐயாவே
அன்பாய் நீராவிப் பதியில்
தீரத்தோடு உறைகின்ற
செவ்வேள் அண்ணா திருக்குமரா
வீரகத்தி விநாயகனே
விரைவாய் எம்மைக் காப்பாயே.

## நாட்டுச் சிறப்பு

ஈழமுண்டலந் தன்னில்
இலங்கும் யாழ்ப்பாணப்பதியில்
நன்றாம் வடலியடைப்பென்றுந்
நல்லவூரில் சுமந் தோறும்
வாழும் சங்கு இசைபாடும்
வயலில் பயிர்கள் நடமாடும்
ஆழக் கடலில் மீன்பாயும்
அழகைக் காணக் காணாதே.

நிமிர்ந்து நிற்கும் பனைதோறும்
நிலவும் கதிரும் உளரயாடும்
நிமிர்ந்த ஞானியர் சூழும்
சிறந்த கோயில் குளமுண்டு
அமுதை ஒத்த நல்லோர்கள்
அரணாய் விளங்கும் பழம்பதியாய்
அமைந்த வடலியடைப்பே யாம்
அன்னை சரஸ்வதியார் ஊராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறப்பு

அந்நாள் ஆங்கிலக் கல்வி
அறிந்த ஒருவர் முயற்சியுள்ளார்
பொன்னம் பலத்தார் சிங்கப்பூர்
போனார் பதவி வுயர் வுற்றார்
அன்னார் சொந்த மச்சாளாம்
அரிவை சிதம்பரப் பிள்ளை
என்னும் பெண்ணை இனிதாய்
இல்லறத்தில் இணைத்தாரே.

இல்லறத்தை நல்லறமாய்
இனிதாய் நடத்தி இவர் மூன்று
பிள்ளைக் கனிகள் தமைப் பெற்றார்
பெரிய இராசரெத்தினமும்
நல்ல துரைரத்தினத்தோடு
நங்கை சரஸ்வதியாம் சேர
உள்ளம் மகிழ்ந்து இவ்வுலகில்
உறவோ டினிதாய் வாழ்ந்தாரே.

அப்பா அம்மா அண்ணன்மார்
அரிய சுற்றம் யாபேரும்
எப்பவுமே இனிதாக
ஏத்திப் போற்றி வளர்த்திட்ட
செப்பமான சரஸ்வதியார்
சிறப்பும் பெற்றுப் பருவமெய்தி
துப்பார் மேனியன் பாதம்
துதித்து வாழ்ந்து வரலானார்.

## திருமணம்

யாழ் நகர் சிறாம்பியடிக்
கார்த்தி கேசர் நல்ல மனிதர்
நயினைவூர் பொன்னம்மாவாம்
பெருமகளைப் பாரியாராய்த் தானேற்று
நிதியாய் விஜயரெத்தினத்தை
மதியில் மிக்க மைந்தனை இம்
மண்ணில் பெற்று மகிழ்ந்தாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிய விஜய ரெத்தினத்தார்
அன்பாய் இராசாமணி யென்னும்
அரிய பெண்ணை மணந்தன்பாய்
இரண்டு குழந்தைகள் பெற்றார்
விதியின் பயனாய் இராசாமணி
விண்ணை யடைந்தார் அதன்பின்னர்
மதியில் வல்ல சரஸ்வதியாம்
மங்கை தன்னை மணந்தாரே.

அம்மி மிதித்து அருந்ததியை
அழகாய்க் காட்டி ஏழடியாம்
செம்மையாலே நடக்கையிலே
சிறிய பிஞ்சு இரண்டுஞ் சேர்ந்து
அம்மா என்று அழைக்கின்ற
அரிய பாக்கியம் பெற்றார்
இம்மா நிலத்தின் இயல்பதனை
யாவர் அறிவார் அவனன்றி.

## பிள்ளைகள்

மூத்த குழந்தை இவர்பெற்ற
முத்தாம் இராசரெத்தினத்தார்
வாய்த்த ஒவிசியர் பதவி
வகித்தார் நல்ல வளமுற்றார்
சேயாம் சண்முகநாதன்
சிறந்த விகிதர் எனப்பெற்றார்
காய்த்த மரமாய் இப்புவியில்
கனிவாய் வாழ்ந்து மறைந்தனரே.

அன்னை சரஸ்வதியார் வயிற்றில்
அன்பாய் பிறந்தோர் நால்வர் - அவர்
பொன்னை ஒத்தார் அசலாம்பிகை
புதல்வர் 'பாமஸிஸ்ட்' மகாலிங்கம்
இனியன் உறவு போற்றும்
தலைவன் பிறர் நலன் நாடும்
பெரியன் இவன் தங்கையாய்
வாய்த்த கமலாம்பிகை
பெருமை சேர் பட்டதாரி நல்ல
தொரு கல்லூரி அதிபர்
இளைய தங்கை ஞானாம்
பிகையோ ஏற்றமிகு எழிலி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள்

சரஸ்வதியார் வளர்த்த தகுதிசேர் பிள்ளைகளுள்
இராசரெத்தினம் மணந்தார் வேலணையூர் யோகவதி
ஆறு குழந்தைகளை அன்பாகப் பெற்றார்கள்
யோகரெத்தினம் யோகரஞ்சினி ரஞ்சிதமலரோடு
ஜெயக்குமார் தனுஜா சுரனுதா ஆகியோரை
அன்பாய் வளர்த்தார்கள் அன்னை மகிழ்ந்திடவே.

இரண்டாவது மகனார் சண்முகநாதனவர்
தெய்வானைப் பிள்ளையைத் திருமணம் செய்திட்டார்
சந்திரப்பிரேமா சந்திரகாந்தன் லோகேஸ்வரனோடு
தில்லேஸ்வரன் விஜயநாதன் நிசாலினியைப் பெற்று
அன்பாக இல்வாழ்வில் அமைந்தார் மகிழ்வோடு.

அகலாம்பிகை எனும் அரிவை இப் பூவுலகில்
இராசகுலசிங்கமெனும் காணி ஒவிசியர் தமை
மணந்து பத்மராணி ஜெயராணி சிறீகாந்தனோடு
விஜயராணி பாமினியாம் பிள்ளைகள் தமைப்பெற்றார்
அசலாம்பிகை பிள்ளைகட்கு அன்பாய் மணம்முடித்து
உமாபதி, அழகரத்தினம், வசந்தலீலா, அருளானந்தம்
ஆகிய மருமக்களை அடைந்து மகிழ்ந்தாரே.

பாகான மைந்தன் பொறையாளன்
மகாலிங்கத்தை லலிதாதேவியெனும்
ஆசிரியைக்கு அன்பாய் மணம் முடித்தார்
அன்னவர்க்குப் பிரபாகரன், பிரதீபன், அனித்தா எனும்
பிள்ளைகள் பிறந்திடவே பெரிதும் மகிழ்ந்தாரே.

பெருமைசேர் பட்டதாரிப் பெண் கமலாம்பிகை
நிருவாக சேவையாளன் புனைகதை நாவல் யாவும்
புகழ் பெறப் படைக்க வல்லோன்
கலாநிதி குணராசாவை உரிமையாய் மணந்து
ரேணுகா, பிரியா, கம்ஷா எனும் புதல்வியரை
பெற்று மகிழ்ந்ததுடன் பிரியமாய் ரேணுகாவை
வைத்திய கலாநிதியாம் பிரதீப்குமாருக்கு
மணம் முடித்து வைத்து மகிழ்ச்சியடைந்தாரே.

ஞானாம்பிகை நல்லாள் பத்மநாதன் என்கின்ற
வர்த்தகரை மணந்து வாழ்ந்து வரலானார்
ராகுலன், முகுந்தன், தனுஜா எனும் குழந்தைகளோடு
இந்த நாட்டு மண்ணில் ஏற்பட்ட சாபத்தால்
சிதறிக் கடல் கடந்த எண்ணற்றோர் வரிசையிலே
இவர்களும் ஆனார்கள் இந்தியாவில் உற்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்குபுகழ் மூதாட்டி பனிதவதி
மங்கையர் நற்றிலகம் சரஸ்வதியார்
கூடவிருந்து குளிர்வித்து பாசத்தால்
மகிழ்வித்து பணிவிடை செய்து
பாக்கியம் பெற்ற பேரப்பிள்ளைகள்
எழுவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப்
போதானாசிரியன் நல்ல பேரன் பிரபாகரன்
அவன் பின்னவன் பிரதீபன், அவன் தங்கை அனித்தா
நல்ல பேர்த்தியர் ரேணுகா, பிரியா, கம்ஷாவோடு
ஜெயராணி சேர அம்மம்மா சரஸ்வதியார்
இனிதே வாழ்ந் திருந்தார்.

## பேரப்பிள்ளைகள், பூட்டப் பிள்ளைகள்

பேர்த்தி யோகரஞ்சினி பெற்ற குழந்தைகளோ
சிபோதன் ஹரிஞ்ஞன் கௌசிகா ஆவார்கள்
இன்னோர் பேர்த்தி சந்திரப்பிரேமா
இனிதாகப் பெற்ற இனிய குழந்தைகளாம்
நதீஸ் சிவானுஜா சுஜன் சஜன் சய்ஜா
மற்றொரு பேரன் சந்திரகாந்தன்
மகிழ்வுடன் பெற்றான் ஷஞ்சரேன், விபூஷன்
வேறொரு பேர்த்தி பத்மராணி
விருப்பொடு பெற்ற பிள்ளைகள் நால்வர்
சத்தியகுமார் சதீஸ்குமார் சுரேஸ்குமாரோடு
சைலஷா என்னும் தையலுமாவர்.
சத்தியகுமார் நல்ல சதீஸ்குமார் இருவர்
இம்மண்ணில் நடந்த மண்மீட்புப் போரில்
ஆகுதியாகி மறைந்து போயினர்
ஜெயராணி என்னும் இன்னொரு பேர்த்தி
இனிதாகப் பெற்றாள் அரவிந்தன் பகிரதர்
லக்ஷா என்னும் இனிய குழந்தைகளை
பாட்டி சரஸ்வதியின் பக்கத்தே இவ்விருந்து
பணிவிடை பல செய்தும் விருப்புடன் உரையாடி
கண்டு மகிழ்வூட்டி இருந்தாரே இவ்வுலகில்
சிறீகாந்தா என்ற இன்னொரு பேரன்
பயின்ற பிள்ளைகள் கோபிகா, அபினயா இருவராவர்
விஜயராணி என்னும் இனிய பேர்த்தி
உவந்து பெற்ற மக்களாவர் நித்தியா சுகன்யா
மட்டற்றக்களிப்புற்று மகிழ்வுடன் வாழ்கின்றனரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூத்துக் குலுங்கும் புதிய மரமொத்து
வாய்த்த வளத்தோடு வருவாரைத்தான் ஓம்பி
சுற்றம் தனைக் காத்துச் சுகமாகப் பிள்ளைகளும்
இருபத்தாறு இனிய பேரப்பிள்ளைகளும்
இனிக்கும் பூட்டப்பிள்ளைகளாம் இருபத்து ஒருபேரும்
அன்பாய்ப் புடைசூழ அன்னை சரஸ்வதியார்
இன்பமாய் வாழ்ந்து இறைபதம் அடைந்தாரே.

## வேறு

இத்தகைய பிள்ளைச் செல்வம் இனசனம் சுற்றம் சூழ
அத்தனை யாவும் பெற்று சரஸ்வதி என்னும் தாயார்
நித்தமும் மகிழ்ச்சியாக நிலமிசை வாழ்ந்து சென்றார்
உத்தமி அவரின் ஆன்மா உய்கநற்பதமே என்றும்.

## மக்கள் புலம்பல்

எம்மை முன் கருவிலேற்றி சுமைந்து திங்களாக
வெம்மை சூழ் நோயுண்டாக விருப்பிலா மருந்துட்கொண்டு
புன்மை சேர் மரணகுன்றில் புகுத்தெமைப் புதிராய்ச் சென்ற
அம்மா நீ பிரிந்தா யெங்கள் துயருக்கோ ரளவுண்டோபோ.

பத்து மாதம் வயிற்றிற் சுமந்து பெற்றுப்
பாலூட்டித் தாலாட்டி வளர்த் தெடுத்து
சித்தி பெறக் கல்வி கற்பித்து அமுது மூட்டித்
திருமணமும் செய்து வைத்த தெய்வத் தாயே.

மக்களாம் எங்களை நீர் தவிக்க விட்டுப்
போய் மறைந்தீர் பொல்லாத பாவியானோம்
இத்துயரம் இனிப் பொறுக்க முடியாதம்மா
எப்பிறப்பில் உனைக் காண்போம் இயம்பவாயே.

## மருமக்கள் புலம்பல்

ஆதவனை இழந்தவொரு பகலை போலும்
அச்சுடைந்து விழுந்திட்ட வண்டி போலும்
தெய்வ மில்லாத வெறுங் கோயில் போலும்
கூரையில்லாத நல் மனையைப் போலும்
நன்னீரில்லாத பாழ் கிணற்றை போலும்
ஆழ்கடலிற் சிக்கியவொரு துரும்பு போலும்
மாமியாரே உமையிழந்து தவிக்கின்றோமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நாளில் நாங்கள் இனியாரை அன்புடையமாமி என்போம்
அதன் பெருமை உன்னிடத்தில் அமையக் கண்டோம்
பொன்னான அன்பு கண்டோம் புன்முறுவல் கண்டோம்
புகழ் நாணம் மடம் அச்சம் பயிர்ப்பென்ற புதுமை கண்டோம்

## பேர பூட்டப் பிள்ளைகள் புலம்பல்

அருகியுந்தன் மனையிடத்தெம் அடியைக் காணில்
அருட் கண்ணால் அலங்கரித்து ஆசையிட்டால்
உருகியன்பு பெருகி வழிந்தெழுாகி யோட
உறவு முறைகள் பாராட்டி உவமை கூறி
அறுகவையோ டன்னமிட்டுத் தாகந் தீர்த்து
நேயமுடன் பேசியெம் மேல் அன்பையீந்த
பெருமை தங்கு அம்மம்மா அப்பம்மா, பாட்டி உன்போல்
பேருலகில் இன்னொருவர் பிறப்பதுண்டோ?

## நிலையாமை

தட்டுமா மலரில் வாழும் சதுர் முகன் படைத்த மண்ணை
எட்டரைத்தானை சூழ இருந்தரசாண் டோரெல்லாம்
அட்டமா சித்தியாடி அங்கதத்தைப் பங்கமாக்கி
விட்டனருயிரை யென்றால் மற்றவர் விலகப்போமோ?

பொன்னொடு மணியும் புலநில நிறைவும்
பொலிந்திடும் போகங்கள் யாவும்
பண்ணிய பயனால் பலப் பலவாகி
பற்றதுங் கோட்டை விட்டகல
கண்ணி யிற்பட்ட மானது போல
பொன்றிடும் மானிட வாழ்வை
எண்ணினால் இடியொன்றிசைப்ப தேயல்லால்
இதற்கொரு மருந்து வேறுண்டோ.

காண்பதை மறந்திட்டாலும்
காயத்தை மறந்திட்டாலும்
உண்பதை மறந்திட்டாலும்
உயிர்தனை மறந்திட்டாலும்
பொன் பெறு தில்லை மன்றுள்
பொது நடப் புனிதரான
மாண்புறு நடேசர் பாதம்
மறப்பேனோ பிறப்புக் கெல்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டு பட்டிறந்தோர் உண்டு
கொலை ஞரால் மாண்டோர் உண்டு
பண்டைய ஊழினாலே
பகைவரால் இறந்தோர் உண்டு
தென்கடல் மாய்ந்தோர் உண்டு
செல்லினால் தீய்ந்தோர் உண்டு
எண்ணில் இம் அம்மை யாரோ
இயற்கையாய் முடிந்தார் வாழ்க

சுற்றத்தார் இருந்த போதும்
தொல் பொருள் இருந்த போதும்
கற்றவர் நிறைந்த போதும்
காதலர் சூழ்ந்த போதும்
மற்றவர் வந்த போதும்
மறைவழி சுடலை சேர்க்க
உற்றவோர் உடல் இல்லாமல்
உறங்கியோர் பலரே யாவர்

ஆயினும் இந்த அம்மா
அனைவரும் சூழ்ந்து நின்று
தாயிவள் என்றே விம்மத்
தாயாதியோர்கள் கண்கள்
தாரையாய்ப் பொழியும் பாடை
போய்ப் பலர் தூக்கிக் கொள்ளி
புதல்வனே வைக்க சென்ற
வாய்ப்பினை நினைக்கும் போது
வாழ்த்தாது இருக்கலாமோ

ஆதலால் பிள்ளைகள் நீர்
அமைதியைப் பெறுவீர்
காதலாய் இந்த பாட்டி
கடைத் தேற்றம் பெற்றுவிட்டார்
ஒதிய பயனைப் பெற்றார்
ஒன்றுபட்டிறவனோடு

பிள்ளைகள் பேரப்பிள்ளை
பெரிதுள்ள சுற்றத்தீர் நீர்
உள்ளமே வருந்த வேண்டாம்
உயர்வுடன் வாழ்ந்த அன்னை
தெள்ளிய சிவனார் பாதம்
சேர்ந்தனர் கவலை வேண்டாம்
நல்லவர் இந்த மண்ணில்
நலிவதே இல்லை யன்றோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுக் கலித்துறை

மக்கள் புலம்ப மருமக்கள் கலங்கப் பேரரோடு
தொக்க பேத்திமார்க ளெல்லோருந் துயரமுற
பக்க அயலவர் சுற்றத்தவர்கள் பரதவிக்க
நக்கன் இணையடி சரஸ்வதி நீ நண்ணினையோ.

## தேற்றம்

பிறந்தவர் இறப்பது உண்டு
பேசரும் உண்மை எந்தச்
சிறந்தவரான போதும்
செல்வமே படைத்த போதும்
மறலியின் அழைப்பை ஏற்க
மறுத்திட லாகு மோதான்
அறமிது ஆத லாலே
அவர் பிரிவாற்று வோமே.

கற்பரசி சரஸ்வதி உடல் தணிந்து
சிற்பரனின் பொற்பாதம் சென்றடைந்தாள்- இப்புவியில்
மக்கள் மருமக்கள் பேரர் பூட்டர் உறவினர்கள்
துக்க மற்று வாழ்வீரே சுபம்.

திருச்சிற்றம்பலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

எங்கள் குடும்பத் தலைவி திருமதி. சரஸ்வதி விஜயரெத்தினம் அவர்களின் இறுதிச் சடங்கிலும், அந்திரேட்டி வைப வத்திலும் கலந்து கொண்ட உற்றார். உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பி எமக்கு ஆறுதல் கூறிய அன்பர்களுக்கும் எங்கள் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்த பெரியார்களுக்கும் எங்கள் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்ஙனம்

| மக்கள் | | மருமக்கள் |
|---|---|---|
| கா. வி. மகாலிங்கம் | — | திருமதி. ம. லலிதாதேவி |
| இ. அசலாம்பிகை | — | திரு. அ. இராசகுலசிங்கம் |
| கு. கமலாம்பிகை | — | கலாநிதி. க. குணராசா |
| ஞ. ஞானாம்பிகை | — | திரு. ஞ. பத்மநாதன் |
| | — | திருமதி. இ. யோகவதி |
| | — | திருமதி க. தெய்வானைபிள்ளை |

டிலேஷ் அச்சகம். பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org